# Sri Kaliswari College (Autonomous), Sivakasi

(Affiliated to Madurai Kamaraj University

Re-Accredited with 'A' grade (CGPA 3.30) by NAAC)

**Programme Scheme, Scheme of Examination and Syllabi**

**(For those who join from June 2018 and afterwards)**

# Department of Tamil

**Research Programme – M.Phil Tamil**

## Curriculum Design and Development Cell

# Sri Kaliswari College (Autonomous), Sivakasi

## Programme Outcomes (PO)

## Pre Doctorial (M.Phil)

**Knowledge**

PO 1 : Research Oriented knowledge and updated acumen.

PO 2 : Application of research on emerging recent trends.

**Skills**

PO 1 : Contribution to research culture through publications.

PO 2 : Ability to take up Minor/Major research projects.

**Attitude**

PO 1: Technological Competency for global needs.

PO 2 : Competency to address latest socio economic issues.

# M.Phil

## Programme Specific Outcomes:

a) **Knowledge:**

- மாணவர்களின் அறிவாற்றலை மேம்படுத்தும் தமிழ் மொழியை ஆய்வியல் நிறைஞர் பட்டப்படிப்பில் (M.Phil) ஆய்வு நெறிமுறைகள், ஆய்வு அணுகுமுறைகள் ஆகியவற்றை இணைத்துக் கற்றுச் செல்கின்றனர்.

b) **Skill Development:**

- ஒவ்வொரு பருவத்திற்கும் நடத்தப்படும் சிறப்புப் பொழிவுகளின் மூலம் மாணவர்கள் மேடைப் பேச்சாற்றல் திறனை வளர்த்துக் கொள்கின்றனர்.
- படைப்பாக்கத் திறனை வளர்த்துக் கொண்டு செல்கின்றனர்.
- இலக்கியங்களை அறிவியல் வழி ஆராய்வதற்கு வழி செய்கின்றது.

c) **Higher level Ability & Progression to Higher Studies**

- ஆய்வியல் நிறைஞர் பட்டப்படிப்பு (M.Phil) முடித்து, முனைவர் பட்டம் பெறுவதற்கான வழிமுறைகளைப் பெற்றுச் செல்லல். மேலும், கல்லூரி ஆசிரியர் ஆவதற்குரிய திறனையும் வளர்த்துச் செல்லல்.

d) **Entrepreneurship and Employment**

- ஆய்வியல் நிறைஞர் படிப்பு முடித்த பின், பல்கலைக்கழக மானியக்குழு நடத்தும் SET, NET தேர்வில் தேர்ச்சி பெற்று, கல்லூரி ஆசிரியராகப் பணியாற்றல்.
- தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (TNPSC) நடத்தும் தேர்வுகளில் பங்கு பெற்று, வெற்றி பெற்று, அரசு அலுவலகங்களில் பணியாற்றல். இந்து சமய அறநிலையத்துறையின் மூலமாகக் கோவில்களில் பணியாற்றல்.

**Sri Kaliswari College (Autonomous), Sivakasi**
**Department of Tamil**

**Choice Based Credit System - Curriculum Pattern**

**Research Programme – M.Phil Tamil**

**(2018 – 2020)**

| Semester | Course Code | Course Name | Hours | Credits |
|---|---|---|---|---|
| I | 18HTAC11 | **Core Course - I:** ஆராய்ச்சி நெறிமுறைகள் | 6 | 5 |
| | 18HTAC12 | **Core Course - II:** ஆராய்ச்சி அணுகுமுறைகள் | 6 | 5 |
| | 18HTAC13 | **Core Course - III:** உரை மரபுகள் | 6 | 5 |
| | | **Total** | **18** | **15** |
| II | 18HTAJ21 | **Core Course** : Project | - | 5 |
| | | **Total** | **-** | **5** |

| **Semester** | I | II | **Total** |
|---|---|---|---|
| **Credits** | 15 | 5 | **20** |

**HOD** | **Dean of Languages** | **Dean of Academic Affairs** | **Principal**

**Sri Kaliswari College (Autonomous), Sivakasi**

**Department of Tamil**

**Research Programme - M.Phil**

**Semester I**

**(2018 – 2020)**

**Core Course –I: ஆராய்ச்சி நெறிமுறைகள் (18HTAC11)**

**(For those who join from June 2018 and afterwards)**

| | | | |
|---|---|---|---|
| **Credits** | **: 5** | **Int.Marks** | **: 40** |
| **Hours/Week** | **: 6** | **Ext.Marks** | **: 60** |
| **Duration** | **: 90 hrs** | **Max.Marks** | **: 100** |

**கற்றலின் பயன்கள்:**

- ஆய்வு நெறிமுறைகளை அறிதல்.
- ஆய்வேடு உருவாக்கம், கட்டமைப்புகளை அறிதல்.
- ஆய்வு முறையியலோடு ஆய்வேட்டை உருவாக்குதல்.

**கற்றலின் விளைவுகள்:**

1. முனைவர் பட்ட ஆய்விற்கு வழி வகுக்கும்.
2. நூலகப் பயன்பாட்டை அறிய முடியும்.
3. நேர்காணல் முறையையும் முக்கியத்துவத்தையும் தெரிந்து கொள்ள முடியும்.
4. வாசிப்புப் பழக்கம் மிகுதியாகும்.
5. ஆய்வாளர் தம் தகுதியை மேம்படுத்திக் கொள்ள முடியும்.
6. ஆசிரியப்பணிக்குத் துணைபுரியும்.
7. நூல்கள் எழுதும் பழக்கத்தை உருவாக்கும்.

---

**கூறு I** **(18hrs)**

**ஆய்வும் ஆய்வுச் சிந்தனையும்:** ஆராய்ச்சி விளக்கம் - ஆய்வைத் தொடங்கும் முறை - ஆராயும் பொருள் பற்றிய தெளிவு - ஆய்வு வகைகள் - அடிப்படை ஆய்வு, பயன்பாட்டாய்வு - கள ஆய்வு, இருக்கை ஆய்வு.

**கூறு II** **(18hrs)**

**ஆய்வுக் களங்கள்:** ஆய்வுக் களங்கள் - ஆய்வுச் சிக்கல்கள் - சிக்கலை இனங்காணுதலும் பகுத்துணர்தலும் - சிக்கலிலிருந்து தலைப்பைத் தேர்ந்தெடுத்தல் - ஆய்வுத் தலைப்பை உறுதி செய்தல் - ஆய்வு எல்லை - ஆய்வேட்டின் நடை - ஆராயும் முறை - கள ஆய்வு - இருக்கை ஆய்வு.

**கூறு III** **(18hrs)**

**ஆய்வாளரும் கருதுகோளும்:** ஆய்வாளரின் தகுதிகள் - பொதுத்தகுதிகள் - சிறப்புத் தகுதிகள் - ஆய்வாளரின் முயற்சிகள் - ஆய்வு நாகரிகம் - கருதுகோள் - கருதுகோளின் வகைகள் - கருதுகோள், ஆய்வு முடிவு - வேறுபாடு - உற்றுநோக்கல் - உற்றுநோக்கலின் பயன்கள் - வகைகள் - பங்குபெறும் உற்றுநோக்கல் - பங்குபெறா உற்று நோக்கல் - உற்றுநோக்கலில் உள்ள இடர்ப்பாடுகள் - கருவிநூல் பட்டியல் தயாரித்தல்.

**கூறு IV** **(18hrs)**

**தரவுகள்:** சான்றாதாரங்கள் - முதன்மைச் சான்றுகள் - துணைமைச் சான்றுகள் - சார்புச் சான்றுகள் - ஆய்வுத் தரவுகளும் தொகுப்பு முயற்சிகளும் - நூலகமும் ஆய்வேடும் - குறிப்பட்டை முறை – தரவுகளை வகை தொகைப் படுத்துதல் - வாய்மொழி மரபுச் செய்திகள் - நேர்காணல் - வினாநிரல்.

**கூறு V** **(18hrs)**

**ஆய்வேட்டின் அமைப்பு:** ஆய்வறிக்கை எழுதும் முறை - மேற்கோள் காட்டும் முறைமைகள் - அடிக்குறிப்பும் சான்றெண் விளக்கமும் - கருவிநூல் பட்டியல் விளக்கமும் தயாரிப்பும் - துணைநூல் பட்டியல் தயாரித்தல் - கருவிநூல் பட்டியல், துணைநூல் பட்டியல் வேறுபாடு - ஆய்வேட்டின் கட்டமைப்பு - அகக்கட்டமைப்பு - முன்னுரை - ஆய்வேட்டின் உட்பகுதி - துணைநூற்பட்டியல் - பின்னிணைப்புகள் - புறக்கட்டமைப்பு - முகப்புப் பக்கம் - நெறியாளர் சான்றிதழ் - ஆய்வாளர் உறுதிமொழி - பொருளடக்கம் - சுருக்கக் குறியீட்டு விளக்கம்.

**பார்வை நூல்கள்** :


1. முத்துச்சண்முகன், சு.வேங்கடராமன், "இலக்கிய ஆராய்ச்சி நெறிமுறைகள்", என்.சி.பி.எச்., அம்பத்தூர், சென்னை, முதற்பதிப்பு 2013.
2. தமிழண்ணல், எம்.எஸ்.இலக்குமணன், "ஆய்வியல் அறிமுகம்", மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, ஏழாம் பதிப்பு 2002.
3. கு.வெ. பாலசுப்பிரமணியன், "ஆய்வியல் நெறிகள்", உமா நூல் வெளியீட்டகம், 156, காமாட்சி அம்மன் கோயில் தெரு, சரபோசி நகர், மருத்துவக் கல்லூரிச் சாலை, தஞ்சாவூர், நான்காம் பதிப்பு 2009.
4. பொற்கோ, "ஆராய்ச்சி நெறிமுறைகள்", ஐந்திணைப் பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை, நான்காம் பதிப்பு 2004.
5. ஆ. சண்முகம், எச். சித்திரபுத்திரன், "ஆய்வு முறையியல்", அன்னம், 1, நிர்மலா நகர், தஞ்சாவூர், முதற்பதிப்பு 2005.

**Sri Kaliswari College (Autonomous), Sivakasi**

**Department of Tamil**

**Research Programme - M.Phil**

**Semester I**

**(2018 – 2020)**

**Core Course –II: ஆராய்ச்சி அணுகுமுறைகள் (18HTAC12)**

**(For those who join from June 2018 and afterwards)**

| | | | |
|---|---|---|---|
| **Credits** | **: 5** | **Int.Marks** | **: 40** |
| **Hours/Week** | **: 6** | **Ext.Marks** | **: 60** |
| **Duration** | **: 90 hrs** | **Max.Marks** | **: 100** |

**கற்றலின் பயன்கள்:**

- அடிப்படையான திறனாய்வு அணுகுமுறைகளை அறிதல்.
- அணுகுமுறைகள் வழி இலக்கியத்தை ஆராய்தல்.
- ஆய்வு நோக்கில் மாணவர்களைச் சிந்திக்கத் தூண்டுதல்.

**கற்றலின் விளைவுகள்:**

1. முனைவர் பட்ட ஆய்விற்கு வழி வகுக்கும்.
2. ஆய்வு அணுகுமுறைகளை ஆய்வேட்டில் பயன்படுத்த முடியும்.
3. ஒப்பீட்டாய்வுக்குப் பயன்படும்.
4. சிறப்புப் பொழிவிற்கு உறுதுணையாக அமையும்.
5. நூல் வெளியீட்டிற்கு உதவியாய் இருக்கும்.
6. ஆய்வு நெறியாளராவதற்குத் துணை செய்யும்.
7. ஆய்வாளர் தம் தகுதியை மேம்படுத்திக் கொள்ள முடியும்.

---

**கூறு I** **(18hrs)**

இலக்கியமும் திறனாய்வும் - திறனாய்வாளனும் திறனாய்வும் - விளக்கமுறைத் திறனாய்வு - விதிமுறைத் திறனாய்வு - மூலபாடத் திறனாய்வு - உரைமரபுத் திறனாய்வு - பகுப்புமுறைத் திறனாய்வு.

**கூறு II** **(18hrs)**

சமூகவியல் அணுகுமுறை - சமுதாய ஆவணம் - சமுதாய சிக்கல்கள் - குடும்ப நிறுவனம் - வரலாற்றியல் அணுகுமுறை - வரலாற்றியல் அணுகுமுறையும் தமிழியல் ஆய்வும்.

**கூறு III** **(18hrs)**

உளவியல் அணுகுமுறை - தமிழ் இலக்கியத்தில் உளவியல் அணுகுமுறை - தொல்படிமவியல் அணுகுமுறை - சிலப்பதிகாரத்தைத் தொல்படிமவியல் முறையில் ஆராய்தல்.

**கூறு IV** **(18hrs)**

மானிடவியல் அணுகுமுறை - இனவரைவியல் ஆய்வு - சங்கப் புறப்பாடல்களின் மானிடவியல் கூறுகளை ஆராய்தல் - ஒப்பியல் அணுகுமுறை - சங்க அக மரபுகளை பதினெண் கீழ்கணக்கு அகநூல்களுடன் ஒப்பிட்டு அறிதல்.

**கூறு V** **(18hrs)**

அமைப்பியல் - பின் அமைப்பியல் - நவீனத்துவம் - பின் நவீனத்துவம் - எதார்த்தவியல் - மிகை எதார்த்தவியல் - தலித்தியமும் தமிழ் பண்பாடும் மரபும் - பெண்ணியத் திறனாய்வும் அணுகுமுறையும்.

**<u>பார்வை நூல்கள்:</u>**


1. தி.சு.நடராசன், ''திறனாய்வுக் கலை'', என்.சி.பி.எச்., சென்னை, இரண்டாம் பதிப்பு 2003.
2. பக்தவத்சல பாரதி, ''பண்பாட்டு மானிடவியல்'', மெய்யப்பன் பதிப்பகம், 53, புதுத்தெரு, சிதம்பரம், நான்காம் பதிப்பு 2009.
3. பக்தவத்சல பாரதி, ''தமிழர் மானிடவியல்'', அடையாளம், புத்தாநத்தம், திருச்சி, முதற்பதிப்பு 2008.
4. க.பஞ்சாங்கம், ''தொன்மத் திறனாய்வு'', அன்னம், நிர்மலா நகர், தஞ்சாவூர், முதற்பதிப்பு 2005.
5. க.பஞ்சாங்கம், ''தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு'', அன்னம், நிர்மலா நகர், தஞ்சாவூர் முதற்பதிப்பு 2004.
6. கு.பகவதி, ''திறனாய்வு அணுகுமுறைகள்'', உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு 2007.
7. அ.அ.மணவாளன், ''இலக்கிய ஒப்பாய்வு சங்க இலக்கியம்'', என்.சி.பி.எச்., சென்னை, முதற்பதிப்பு 2009. .
8. க. கைலாசபதி, ''சமூகவியலும் இலக்கியமும்'', குமரன் பப்ளிகேசன், சென்னை, இரண்டாம் பதிப்பு 2009.
9. இரா.பிரேமா, ''பெண்ணியம் - அணுகுமுறைகள்'', தமிழ்ப் புத்தகாலயம், தி.நகர், சென்னை, முதற்பதிப்பு 1998.
10. கே.பழனிவேலு, ''கோட்பாட்டியல் திறனாய்வுகள்'', அகரம், தஞ்சாவூர், முதற்பதிப்பு 2005.
11. தமிழவன், ''அமைப்பியலும் அதன் பிறகும்'', அடையாளம் பதிப்பகம், திருச்சி, இரண்டாம் பதிப்பு 2008.

**Sri Kaliswari College (Autonomous), Sivakasi**
**Department of Tamil**
**Research Programme - M.Phil**
**Semester I**
**(2018 – 2020)**
**Core Course –III : உரை மரபுகள் (18HTAC13)**
**(For those who join from June 2018 and afterwards)**

| | | | |
|---|---|---|---|
| **Credits** | **: 5** | **Int.Marks** | **: 40** |
| **Hours/Week** | **: 6** | **Ext.Marks** | **: 60** |
| **Duration** | **: 90 hrs** | **Max.Marks** | **: 100** |

**கற்றலின் பயன்கள்**:

- உரைகளின் தோற்றப் பின்னணி அறிதல்.
- உரைகளின் புலமைச் செயல்பாடு, திறனாய்வு நெறிகளை அறிதல்
- உரைகள் தனித்த பனுவலாகத் திகழ்வதைப் புரிந்து கொண்டு, உரை மரபுகளை உள்வாங்குதல்.

**கற்றலின் விளைவுகள்:**

1. பல்வேறு உரைகளை ஒப்பீடு செய்ய பயன்படும்.
2. உரையாசிரியர்களின் ஆளுமைத்திறன் வழி தமது ஆளுமைத் திறனை மேம்படுத்த முடியும்.
3. நூல்களுக்கு உரை எழுதும் ஆர்வம் ஏற்படும்.
4. உரையாசிரியர்களின் உரைவழி புதுமையான செய்திகளை அறிய முடியும்.
5. உரையாசிரியர் தொடர்பான கருத்தரங்கில் பங்கு கொள்ள வாய்ப்பாக அமையும்.
6. இலக்கணத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ள இயலும்.
7. வாசிப்புப் பழக்கம் மிகுதியாகும்.

---

**கூறு I** **(18hrs)**

**தொடக்ககால உரைகள்:** உரைகள் அறிமுகம் - சங்க இலக்கியத் துறைக்குறிப்புகள் - துறைக்குறிப்புகள் தோற்றப் பின்னணி - தனித்தன்மை - இறையனார் களவியல் உரை - தோற்றப் பின்னணி - தனிச்சிறப்புகள் - உரை இயல்புகள்.

**கூறு II** **(18hrs)**

**இலக்கண உரைகள்:** தொல்காப்பிய உரைகள் - இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், கல்லாடர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர் - அறிமுகம் - இளம்பூரணர் - எழுத்ததிகார உரைநெறி - சேனாவரையர் - சொல்லதிகார உரைநெறி - பேராசிரியர் - பொருளதிகார உரைநெறி - நன்னூல் - மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர் உரைகள் - அறிமுகம் - உரை இயல்புகள்.

**கூறு III** **(18hrs)**

**இலக்கிய உரைகள்:** சங்க இலக்கிய உரைகள் (முற்கால உரைகள்) - உரை இயல்புகள் - திருக்குறள் உரைகள் - பரிமேலழகர் உரைநெறி - பழமொழி நானூறு - பழைய உரை நெறிகள் - சிலப்பதிகார உரைகள் - அரும்பதவுரை, அடியார்க்கு நல்லார் உரைகள் - உரை இயல்புகள்.

**கூறு IV** **(18hrs)**

**சமயநூல் உரைகள்:** நாலாயிரத் திவ்ய பிரபந்தம் - பெரியவாச்சான் பிள்ளை உரைநெறி - சீவக சிந்தாமணி - நச்சினார்க்கினியர் உரைநெறி - சைவ சித்தாந்த உரைகளின் உரை

இயல்புகள் - மணிமேகலை - உ.வே.சா. உரைநெறி - திருவாசகம் - கா.சுப்பிரமணியபிள்ளை உரைநெறி - சமயநூல் உரையாசிரியர்களின் சமயப்பொறை.

**கூறு V** **(18hrs)**

**20ஆம் நூற்றாண்டு இலக்கண, இலக்கிய உரைகள்:** இருபதாம் நூற்றாண்டு உரைகள் - அறிமுகம் - சி.கணேசையர் - குறிப்புரை இயல்புகள் - ச. பாலசுந்தரனார் - தொல்காப்பிய உரைநெறி - தி.சௌரிப்பெருமாள் அரங்கனாரின் குறுந்தொகை உரை இயல்புகள் - பொ.வே. சோமசுந்தரனார் - முல்லைப்பாட்டு உரைநெறி - ந. சேதுரகுநாதன் - முத்தொள்ளாயிர உரைநெறி - ந.மு.வேங்கடசாமி நாட்டார் - பிற்கால நீதி நூல்களின் (ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலானவை) உரை இயல்புகள்.

**<u>பார்வை நூல்கள்:</u>**


1. மு.வை.அரவிந்தன், ‘‘உரையாசிரியர்கள்’’, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு 2008.
2. ச.குருசாமி, ‘‘இளம்பூரணர் உரைநெறி’’, இராணி பதிப்பகம், அமைந்தகரை, சென்னை, 2007.
3. ச.குருசாமி, ‘‘பேராசிரியர் உரைநெறி’’, இராணி பதிப்பகம், அமைந்தகரை, சென்னை, 2008.
4. ச.குருசாமி, ‘‘நச்சினார்க்கினியர் உரைநெறி’’, இராணி பதிப்பகம், அமைந்தகரை, சென்னை, 2008.
5. க.பஞ்சாங்கம், ‘‘சிலப்பதிகாரத் திறனாய்வுகளின் வரலாறு’’, அன்னம், நிர்மலா நகர், தஞ்சாவூர், 2010.
6. பெ.மாதையன், ‘‘அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும்’’, பாவை பப்ளிகேசன்ஸ், மதுரை, முதற்பதிப்பு 2009.
7. இரா.மோகன், நெல்லை ந.சொக்கலிங்கம், ‘‘உரை மரபுகள்’’, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதற்பதிப்பு 2011.
8. ஆ.மணி, ‘‘குறுந்தொகைத் திறனுரைகள்’’, தமிழன்னை ஆய்வகம், கொங்குவார்பட்டி 625 203, தேனி மாவட்டம், முதற்பதிப்பு 2005.

**Sri Kaliswari College (Autonomous), Sivakasi**

**Department of Tamil**

**Research Programme - M.Phil**

**Semester I**

**(2018 – 2020)**

**Core Course : PROJECT (18HTAJ21)**

**(For those who join from June 2018 and afterwards)**

| | | | |
|---|---|---|---|
| **Credits** | **: 5** | **Int.Marks** | **: 150** |
| **Hours/Week** | **: -** | **Ext.Marks** | **: 50** |
| **Duration** | **: -** | **Max.Marks** | **: 200** |

**ஆய்வேடு**

ஆய்வியல் நிறைஞர்கள் அனைவரும் இரண்டாம் பருவத்தின் இறுதியில் தங்களது ஆய்வேட்டைச் சமர்ப்பிப்பார்கள். ஆய்வாளர்கள் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நெறியாளரோடு (துறைப் பேராசிரியர்கள்) கலந்தாலோசித்து ஆய்வுத்தலைப்பைத் தேர்ந்தெடுப்பார்கள். இதுவரை தாங்கள் அறிந்த அல்லது அறியாத பகுதிகளிலிருந்து ஆய்வை மேற்கொள்ளலாம். குறிப்பிட்ட தலைப்புகளில் மேற்கொள்ளப்படும் ஆய்வேடு 80 பக்கங்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும். ஆய்வாளர்கள் ஆய்வினையும் ஆய்வேட்டினையும் ஆராய்ச்சி நெறிமுறைகளுக்கு உட்பட்டு உருவாக்க வேண்டும்.

ஆராய்ச்சி நெறிமுறைகளுக்கு உட்பட்டு உருவாக்கப்படும் ஆய்வேட்டிற்கு வழங்கப்படும் மொத்த மதிப்பெண் 200 ஆகும். இவற்றில் ஆய்வேட்டிற்கு 150 மதிப்பெண்கள், வாய்மொழித் தேர்விற்கு 50 மதிப்பெண்கள். ஆய்விற்கு நெறியாளர் அகநிலைத் தேர்வாளராக அமைவார். புறநிலைத் தேர்வாளர் ஒருவரும் ஆய்வேட்டினை மதிப்பிடுவார். வாய்மொழித் தேர்வானது அகநிலை மற்றும் புறநிலை தேர்வாளர் இருவர் முன்னிலையிலும் நடைபெறும்.